A 3

திருவாரூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. நா. சேகர் பி.எஸ்சி.,

ந.க.எண். 3615/2017/அ3 (வளர்ச்சி)

நாள்:08.07.2018

002441

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – திருவாரூர் மாவட்டம் - கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலர்களுக்கு 2017-18-ஆம் ஆண்டுக்கான 20% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை 2 - ஆகிய பதவிகளில் பதவி உயர்வு வழங்கப்பட்டது – தனியர்கள் பணியில் சேர்ந்த நாளில் வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

ஊராட்சி ஒன்றியம் 10 JUL 2019 திருவாரூர்

படிக்க:

1. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.3615/2017/அ3(வ), நாள்:05.06.2018
2. திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) கடித ந.க.எண். 1955/2019/அ3, நாள்: 18.06.2019
3. மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கடித ந.க.எண். 1934/2018/அ4, நாள்: 25.06.2019
4. தனியர்களின் பணிப்பதிவேடு
5. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

******

<u>உத்தரவு:</u>

திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், பணிபுரியும் கிராம ஊராட்சி செயலர்களுக்கு 2017-18 –ஆம் ஆண்டில் 20% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற்று பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட கீழ்காணும் நபர்களுக்கு பணியில் சேர்ந்த நாளில் பணிவரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4 | 5 |
| 1 | பி. மதியழகன்,<br>இளநிலை உதவியாளர், | வட்டார வளர்ச்சி அலுவலகம்,<br>மன்னார்குடி வட்டாரம். | 08.06.2018<br>முற்பகல் | 08.06.2018<br>முற்பகல் |
| 2 | வி. பசுபதி,<br>இளநிலை உதவியாளர் | வட்டார வளர்ச்சி அலுவலகம்,<br>திருவாரூர் வட்டாரம். | 08.06.2018<br>முற்பகல் | 08.06.2018<br>முற்பகல் |

மேற்காணும் அலுவலர்களுக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய கட்டுப்பாட்டு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பணிப்பதிவேடு

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
திருவாரூர்.

8/7/19

பெறுதல் :தொடர்புடைய அலுவலர்கள் - (உரிய வழியாக)

நகல்: 1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருவாரூர் மற்றும் மன்னார்குடி
2. இவ்வலுவலக “அ3” இருப்பு கோப்பிற்கு மற்றும் “அ4” பிரிவுக்கு

A/C NO SBI – TVR
A/C 37767775734